30.07.2026 HMOP.No.142/2022 PW1 Name :.**அரிகிருஷ்ணன்**

குறுக்கு விசாரணை

1. எங்களுடைய திருமணம் பெரியோர்களால் நிச்சயம் செய்யபட்டது என்றால் சரி. நான் பெண் பார்த்தது உறவினர்கள் மூலமாகவா அல்லது தரகர் மூலமாகவா என்றால் என்றால் இறந்துபோன ஜெயபால் மூலமாக பெண் பார்த்தேன். திருமணத்திற்கு நான் ரூ.5 லட்சம் செலவு செய்தேன். இந்த விவரத்தை என்னுடைய மனுவிலோ பிரமாண பத்திரத்திலோ கூறவில்லை என்றால் சரி. ஆனால் அதில் தொகை மட்டும் தான் குறிப்பிட்டு கூறவில்லை.
2. அனைத்து செலவுகள் என்று கூறுவது எவற்றை என்றால் திருமண மண்டபம் வாடகை, அலங்காரம், இரவு காலை உணவு, எதிர்மனுதாரரின் மற்றும் அவர் குடும்பத்திற்கான ஆடைகள் எடுத்தது, எதிர்மனுதாரருக்கு 3 சவரன் நகை எடுத்தது 1/2 தாலி ஆகியவை அடங்கும். இதுபோன்று குறிப்பிட்டு நான் கூறவில்லை என்றால் சரி. ஆனால் அனைத்து செலவுகள் என்று கூறியிருக்கிறேன். நான் திருமணத்திற்கு செலவு செய்திருந்தால் அந்த செலவுகள் ஒவ்வொன்றையும் குறிப்பிட்டு கூறியிருப்பேன் என்றால் செலவு செய்யாததால் தான் கூறவில்லை என்றால் சரியல்ல.
3. 3 1/2 சவரன் நகை போட்டதை மனுவில் குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரியல்ல கூறியிருக்கிறேன். திருமணத்திற்கு பிறகு நானும் எதிர்மனுதாரரும் கிரிசமுத்திரம் கிராமத்தில் என் வீட்டில் வசித்து

வந்தோம். எதிர்மனுதாரரின் குடும்பம் பற்றிய முழுவிவரம் தெரிந்துகொண்டுதான் நான் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரியல்ல.

4. எதிர்மனுதாரரின் தகப்பனார் காவல்துறையில் பணிபுரிந்தார் என்றால் என் திருமணத்தின்போது பணிநீக்கம் செய்யபட்டிருந்தார். எதிர்மனுதாரரின் தகப்பனார் பணிநீக்கம் செய்யபட்ட விவரம் எனக்கு திருமணத்தின்போது தெரியும் என்றால் சரியல்ல. திருமணத்திற்கு 2 மாதம் கழித்து தான் எதிர்மனுதாரர் என்னிடம் கூறினார். அவர் பணிநீக்கம் செய்யபட்டது எனது திருமண வாழ்விற்கு இடையூறாக இருந்ததா என்றால் எதிர்மனுதாரரின் நடவடிக்கையால் தான் பிரிவு கோரினேன்.

5. எதிர்மனுதாரரின் தகப்பானர் பணிநீக்கம் செய்யபட்டதால் என்னுடைய வாழ்க்கையில் எந்த இடையூறும் இல்லை என்றால் சரி. ஆனால் அடியாட்களை வைத்து மீறட்டியது தான் எனக்கு இடையூறாக இருந்தது. எதிர்மனுதாரரின் தகப்பனாருக்கு 2 மனைவிகள் திருமணத்தின்போது கூறினார்கள் பிறகு தான் 3 மனைவிகள் என்று கூறினார்கள். எதிர்மனுதாரர் அவருடைய தகப்பனாரின் முதல் மனைவியின் மகள். ஆனால் அவர்களிடையே விவாகரத்து ஆன விவரம் என்னிடம் திருமணத்தின்போது கூறவில்லை.

6. என்னுடைய திருமணத்தின்போது எதிர்மனுதாரரின் தாயார் அங்கு இல்லையா என்றால் அவர் இருந்தார் அவர் வேலைகாரியாக இருந்தார். இந்த விவரத்தை எதிர்மனுதாரர் என்னிடம் கூறினார். நான் தற்போது கூறும் இந்த விவரங்களை என்னுடைய மனுவிலும் முதல்

விசாரணையிலும் கூறவில்லை என்றால் சரி. என்னுடைய திருமணத்தின்போது எதிர்மனுதாரரின் தகப்பனார் பணிநீக்கம் செய்யபட்ட விவரமும் அவருக்கு எத்தனை மனைவிகள் இருந்த விவரமும் எனக்கு தெரியும் என்றாலும் திருமணத்தின்போது எதிர்மனுதாரரின் தாயார் அவர்கள் இருந்தார் என்றாலும் இந்த விவரம் தெரிந்துகொண்டு இந்த விவரங்களை நான் மாற்றி கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7. எதிர்மனுதாரர் என்னைவிட 1 ½ வயது மூத்தவர் என்ற விவரம் எப்போது தெரியும் என்றால் திருமணத்திற்கு பிறகு வாக்காளர் அடையாள அட்டைக்காக ஆவணங்கள் வாங்கி பார்த்தபோது தெரியும். திருமணத்தின்போதே எதிர்மனுதாரர் என்னை விட மூத்தவர் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. தெரிந்திருந்தால் திருமணம் செய்திருக்கமாட்டேன். ஜாதகத்தில் பொய் தேதி போட்டுகொடுத்தார்கள். பொய்யான தேதி போட்டு ஜாதகம் கொடுத்தார்கள் என்ற விவரத்தை மனுவிலும் பிரமாண பத்திரத்திலும் கூறவில்லை என்றால் சரி.

8. எதிர்மனுதாரரின் சகோதரி வாழாமல் அவர் தாய்வீட்டிற்கு வந்ததால் எனக்கு என்ன பிரச்சனை என்றால் அதனால் எனக்கு எந்த பிரச்சனையும் இல்லை. என் தாயார், தந்தையை பராமரிக்க கூடாது என்று எதிர்மனுதாரர் யாரிடம் பேசினார் என்றால் என்னிடமே பேசினார். என்னை அவர் தாய் வீட்டிற்கு வருமாறும் தனிகுடித்தினம் போகலாம் என்று கூறினார். என்னிடம் பேசினார் என்ற விவரத்தை நான் என்னுடைய மனுவிலோ பிரமாண பத்திரத்திலோ கூறவில்லை

என்றால் சரி. எதிர்மனுதாரர் எந்த காலத்திலும் என் பெற்றோரைவிட்டு பிரிய வேண்டும் என்றோ தனிகுடித்தனம் செல்லவேண்டும் என்றோ கூறுவில்லை என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 30/07/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

Sd/xxxx
சார்பு நீதிபதி
வாணியம்பாடி.